# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

E.A.No. 1/2020

in

E.P.No. 35/19

*ம.சா.1- குறுக்கு விசாரணை - நாள் 07-12-2022.*
*பெயர் = குமார் ம.சா.1*
*ம.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி.-*

தாவாச் சொத்தைப் பொறுத்து கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கச் சொல்லி அசல் வழக்கை வாதிகள் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். 2004-ல் அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது மண்சுவர், ஓட்டுவீடு இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டில் வாதிகள் எங்களின் அனுமதியின்பேரில் குடியிருந்ததாக கூறியுள்ளோம் என்றால் சரிதான். அசல் வழக்கில் நாங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் நகல்தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ.1 ஆகும். அசல் வழக்கு தாக்கல் செய்து 18 வருடம் ஆகிறது என்றால் சரிதான். காலப்போக்கில் வழக்கு மத்தியில் மண்சுவர் வீடு இடிந்த நிலையில் உள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கில் நான்குமால்கள் சரியில்லை, விஸ்தீரணம் சரியில்லை என்ற விவரங்களைச் சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது நான் மனுவில் கூறியிருக்கும் விஷயங்களை பிரதான வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதற்காக இந்த மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சொத்து எங்களுக்கு வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். வாதியிடமிருந்து தாவாச் சொத்தை கிரையம் வாங்குவதற்கு பேரம் பேசினேன் என்றால் சரியல்ல. நான்தாக்கல் செய்துள்ள மனு காலம் கடத்தவேண்டி தாக்கல் செய்தது என்பதால் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நான்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடுதான் செய்ய முடியுமேதவிர இந்த மனுவை தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை- இல்லை